# <u>பதிவுத்துறை</u>

## <u>அறிவிப்பு</u>

பதிவுத்துறையின் www.tnreginet.net என்ற இணையதளத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் கீழ்க்கண்ட விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**அ) வழிகாட்டி மதிப்பு:**

தமிழகத்தின் அனைத்து கிராமங்களை பொறுத்து புல எண்/தெருவாரியாக வழிகாட்டி மதிப்பு விபரங்களை பொதுமக்கள் அறியலாம்.

**ஆ) முகவரி:**

தமிழகத்தில் உள்ள துணைப்பதிவுத்துறைத்தலைவர் அலுவலகங்கள், மாவட்டப்பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் சார்பதிவாளர் அலுவலகங்கள் முகவரி மற்றும் தொலைபேசி விபரங்கள் அறியலாம்.

**இ) மாதிரி ஆவணங்கள்:**

அனைத்து மாதிரி ஆவணங்கள், விண்ணப்பங்களின் வரைவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**ஈ) முத்திரைக்கட்டணம் மற்றும் பதிவுக்கட்டணம்**

துறைக்கு செலுத்தப்பட வேண்டிய முத்திரைக்கட்டணம் மற்றும் பதிவுக்கட்டண விபரங்களை அறியலாம்.

**உ) தேடுதல்**

இணையவழி சொத்தின் வில்லங்கச்சான்றினை எந்த வித கட்டணமும் இன்றி பொதுமக்களே சரிபார்த்துக்கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சீட்டு நிதிச்சட்டத்தின் கீழான விபரங்கள், சங்கப்பதிவுச்சட்டத்தின் கீழான விபரங்கள் மற்றும் இந்து திருமணப்பதிவு தொடர்பான விபரங்களை இந்த இணையதளத்தில் தேடி விபரம் பெறலாம்.

இணையவழி சொத்தின் வில்லங்கச்சான்று, சான்றிட்ட நகல், இந்து திருமணச்சான்று, சங்கப்பதிவுகளின் நகல், சீட்டு குறித்த ஆவணங்கள் ஆகியவை வேண்டி விண்ணப்பித்து நேரிலோ அல்லது அஞ்சல் வழியாகவோ பெற வகை செய்யப்பட்டுள்ளது.

சார்பதிவாளர் அலுவலகங்களில் 1987-க்கு பிறகு வில்லங்கச்சான்று விபரங்கள் கணினி வழி தேடுதல் மேற்கொண்டு வழங்கப்படும். 1987-க்கு முந்தைய அட்டவணை 2 விபரங்கள் கணினியில் உட்புகுத்தப்பட்டுக்கொண்டிருப்பதால் அவை அட்டவணை 2 புத்தகத்தின் வழி தேடுதல் மேற்கொள்ளப்பட்டு வழங்கப்படும். வில்லங்கசான்றானது ஒரு சார்பதிவாளர் அலுவலகம் ஆரம்பித்த நாளிலிருந்து அதைச்சார்ந்த கிராமங்களுக்கு அந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். அதற்கு முன் தேவைப்படின் சம்பந்தப்பட்ட கிராமம் இணைந்திருந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். இவ்விபரங்கள் 1865-ம் வருடத்திலிருந்து கிடைக்கும்.

சான்றிட்ட நகலானது அவ்வலுவலகம் கண்ணிமயமாக்கப்பட்ட நாளிலிருந்து கணினி மூலமும் அதற்கு முன்பு சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள 1 புத்தகம் தொகுதியிலுருந்து நகல் எடுத்தும் வழங்கப்படும்.

**ஊ) நகல்கள்**

ஆவணங்களின் பதிவு நகல்கள் கோரி இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம்.

**எ) ஆணைகள்**

அரசு மற்றும் பதிவுத்துறையில் பிறப்பிக்கப்படும் பல்வேறு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**ஏ) FAQ**

இப்பகுதியில் பொதுமக்களின் பொதுவான சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.